
மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
நிலையறி பரீட்சை – 2021

தரம் 5 சுற்றாடல் சார் செயற்பாடுகள் நேரம் - 30 நிமிடங்கள்


பகுதி 1

1. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


1. சூரிய நமஸ்காரப் பயிற்சியின் நான்காம் கட்டத்தைக் காட்டும் உரு யாது?



1)



2)




3)

2. தினமும் போதுமான நீர் பருகுவதனால் ஏற்படும் சௌகரியம்
   1) உடற் கொழுப்புக் குறைவடைதல் 2) தொண்டை உலர்தல்
   3) உடலில் தளர்ச்சி ஏற்படுதல்

3. தேசியக் கொடியில் இரக்கம், காருண்யம். திருப்தி, பற்றின்மை ஆகிய நான்கு நற்பண்புகளையும் குறித்து நிற்பது
   1) வாளேந்திய சிங்கம் 2) நான்கு அரசமிலைகள் 3) சிவப்பு நிறம்

4. சிங்கள இனத்தவர்கள் உட்கொள்ளும் உணவு வகைகள்
   1) கொக்கிஸ், கொண்டைக்கவுன், பாற்சோறு, சீனிச்சம்பல்
   2) வட்டிலப்பம், தேன்குழல், மஸ்கற், அச்சாறு
   3) சர்க்கரைப்பொங்கல், சோறு, மோதகம், கொழுக்கட்டை

5. படத்திலுள்ள தேசிய வீரர்



   1) மொனரவில கெப்பிட்டிப்பொல திசாவ
   2) கொங்காலேகொட பண்டா
   3) கலாநிதி ரி. பி ஜாயா

6. தாவரங்கள் அழிவடைந்து வருகின்றமையால் மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் ஏற்படக் கூடிய பாதகமான விளைவு
   1) மண் வளம் பெறுவதற்குப் பசளை கிடைத்தல்
   2) சூரிய ஒளியின் தாக்கத்திலிருந்து பாதுகாப்புக் கிடைத்தல்
   3) உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்

www.ikedu.lk

7. வறண்ட பகுதிகளில் செழித்து வளரும் தாவரம்

1) கோகிலக் கிழங்கு 2) கள்ளி 3) தாமரை

8. ஈருடக வாழிப் பிராணி

1) தவளை 2) ஆமை 3) முதலை

9. ஊன் உண்ணிப் பிரிவைச் சேர்ந்த பிராணி

1) மான் 2) தும்பி 3) காகம்

10. நாம் வீட்டில் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தும் பொருட்கள்

1) பற்தூரிகை, துவாய்
2) தும்புத்தடி, தொலைக்காட்சி
3) முகம் பார்க்கும் கண்ணாடி, மின்விசிறி

11. இலவசமாகப் பெற்றுக் கொள்ளும் சேவைகள்

1) மின்சாரம், நீர் 2) கல்வி, சுகாதாரம் 3) தொலைபேசி, போக்குவரத்து


12. அனல் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் சக்தி

1) சூரியஒளி 2) நிலக்கரி 3) காற்று

13. நீருடன் தொடர்புபட்ட தமிழர்களுடைய பண்பாட்டு வழக்கம்

1) வளை செய்தல்
2) ஆலயங்களில் தீர்த்தம் வழங்குதல்
3) பிரித் ஓதிய நீர் தெளித்தல்

14. படத்தில் காட்டப்பட்டுள்ள பாத்திரத்திலிருந்து அதிக தூரத்திற்கு நீர் வெளியேறும் துவாரம் எது?



1) C துவாரம்
2) B துவாரம்
3) A துவாரம்

www.lkedu.lk

15. அசுத்த நீரைப் பருகுவதனால் ஏற்படும் நோய்

1) கல்லீரல் அழற்சி 2) குருதியமுக்கம் 3) நீரிழிவு

16. உணவு உண்பதற்கு முன்னர் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கவழக்கங்களில் ஒன்று

1) உணவை விரல்களினால் மட்டும் பிசைந்து கொள்ளல்
2) உதடுகள் அதிகம் திறக்காதவாறு உண்ணுதல்
3) சுத்தமான நீரினால் கைகளைக் கழுவுதல்

17. உடலில் பசியின்மை ஏற்படுவதற்குக் காரணமாக அமையும் உயிர்ச்சத்து

1) விற்றமின் B 2) விற்றமின் A 3) விற்றமின் D

18. உடல் வளர்ச்சியில் கூடிய பங்களிப்புச் செய்யும் உணவுப் பொருட்களின் கூட்டம்

1) சோறு, பாசிப்பயறு, சீனி
2) பருப்பு, பாசிப்பயறு, சோயாஅவரை
3) மாம்பழம், அன்னாசி, தோடம்பழம்

19. சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

1) 110 2) 1929 3) 1990

20. உயரத்திலிருந்து விழுந்து விலா எலும்பு உடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி

1) உடலில் விபத்துக்குட்பட்ட இடத்தைத் துணியினால் கட்டுதல்
2) நபரை அசைக்காமல் சமதள இடத்தில் வைத்திருத்தல்
3) வெந்நீரைக் குடிக்கக் கொடுத்தல்

(2 X 20 புள்ளிகள்)

www.ikedu.lk

மாகாணக்கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை – 2021

தரம் 5 சுற்றாடல் சார் செயற்பாடுகள் நேரம் - 1மணி 30நிமிடம்

பகுதி II

1.அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.
[கவலைப்படும், நீர்த்துளிகள், பங்கசுக்கள். மலர்ச்சியுடன் , இலுப்பை,]

i. சினக்கும் ..... உள்ளத்தை விடுத்தும் நினைவுகளிலிருந்தும் நீங்குவோம்.

ii. வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் நாட்டு மண்ணின் செழுமையை நீக்கும் நோக்குடன்..... மரங்களை எரித்து அழித்தனர்.

iii. ஒழுங்கையும் தூய்மையையும் தமது வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வதால் ..... வேலைகளில் ஈடுபடலாம்.

iv. கண்ணாடிக் குவளையொன்றில் குளிர்பானத்தை ஊற்றும் போது அதன் வெளிப்புறத்தில் ..... உருவாகும்.

v. மட்பாண்டப் பாத்திரங்களைப் பாவித்த பின் நன்றாகக் கழுவி உலரவிடுதல் வேண்டும். இல்லையேல்..... வளரும்.

(1x5புள்ளிகள்)

2.சரியாயின் ✔ அடையாளத்தையும் பிழை எனின் X அடையாளத்தையும் அடைப்புக்குள் இடுக.

i. பல்வேறு இன மக்களுக்கிடையே நட்பு வளர்ச்சியடைவதில் மொழி முக்கியத்துவமடைகின்றது. ( )

ii. விருப்புக்குரியவற்றை நாடிச் செல்வதால் பல குடும்பங்கள் பொருளாதார இடர்பாடுகளுக்கு உள்ளாகின்றனர். ( )

iii. பொருட்களை விற்பனை செய்வதற்காக உற்பத்தியாளர்களும் விற்பனை நிலைய உரிமையாளர்களும் விளம்பர வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர். ( )

iv. மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்குப் பல்லிக்கு விசேட பாதங்கள் காணப்படும். ( )

v. நாம் பயன்படுத்திய நீரை மீண்டும் பயன் உள்ள வழியில் பூங்கன்றுகளுக்கும், காய்கறிப் பாத்திகளுக்கும் பயன்படுத்த முடியாது. ( )

(1x5புள்ளிகள்)

www.lkedu.lk

3. அ பகுதிக்குப் பொருத்தமானவற்றை ஆ பகுதியிலிருந்து தெரிவு செய்து இணைக்குக.

	அ	ஆ
I.	தேசிய மரவுரிமையைப் பேணிக்காத்தல்	கழுத்துப்பட்டி, பாடசாலை இலச்சினை
II.	பாடசாலை அணிகள்	பண்பாட்டைச் சந்ததி சந்ததியாகக் கையளித்தல்
III.	சமையலறை உபகரணம்	திறந்த வெளியில் சஞ்சரித்தல் கூடாது
IV.	மின்னல் மின்னும் வேளை	கனலடுப்பு
V.	தேங்காய்ப்பாதி	கறுப்புப் புள்ளிகள் தோன்றுதல்

(1x5புள்ளிகள்)

4..போசணைக் கூறுகள் அடங்கியுள்ள உணவு வகைகளைத் தெரிவு செய்து அட்டவணைப்படுத்துக.


[முளைக்கீரை, அகத்திக்கீரை, கறிவேப்பிலை, தாமரைக்கிழங்கு, அவரைவகை, நெய்த்தோலிக்கருவாடு, எண்ணெய், கொழுப்பு, மாஜரின், நிலக்கடலை, தானியங்கள், மாப்பொருள் கொண்டகிழங்குகள். பலாக்காய், மீன், பால், முட்டை, இறைச்சி போன்ற விலங்கு மூல உணவுகள், சோயாஅவரை, கடலை போன்ற அவரையவித்துக்கள், பருப்பு, நெல்லிக்காய், கொய்யாப்பழம், மரமுந்திரிகைப்பழம்,தே தாடை]

போசணைக் கூறுகள்	அவை அடங்கியுள்ள உணவுகள்
காபோவைதரேற்று,	
புரதம்	
கொழுப்பு	
விற்றமின் C	
கல்சியம்	

(5x1புள்ளிகள்)

www.lkedu.lk

5. பின்வரும் பரிசோதனைக்கு அமைய வினாக்களுக்கு விடை எழுதுக.



i. இரண்டு முட்டைகளினதும் பாரம் சமமானவையா? அல்லது பாரம் வேறுபட்டவையா? என எழுதுக. .

.....

ii. உப்புநீரில் முட்டையை இட்டால் யாது நிகழும்.

.....

iii. சுத்தமான நீரில் முட்டையை இட்டால் அம்முட்டைக்கு யாது நிகழும்.

.....

(1x3புள்ளிகள்)

6. இலங்கையில் பிரசித்தி பெற்ற விளையாட்டுக்களின் படங்கள் கீழே காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.

(வொலிபோல் , எல்லே, கிரிக்கட்)





....

(1x3புள்ளிகள்)

7.ஒவ்வொரு உருவிலும் காட்டப்பட்டுள்ள தாவரத்தின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(ஆடாதோடை, கற்றாளை, எலுமிச்சை, மஞ்சள்)






....

(1x4புள்ளிகள்)

www.ikeduk

8. சுருக்கமான விடை எழுதுக.

1) பாடசாலை அலுவலகமொன்றில் காணப்படும் பொருட்கள் இரண்டினை எழுதுக.

.....
.....

2) வெள்ளத்தால் ஏற்படும் இடர்கள் இரண்டு எழுதுக.

.....
.....

3) விற்பனை நிலையங்களில் நேரடியாகப் பணத்தைப் பயன்படுத்தாது கொடுக்கல் வாங்கல் செய்யும் அட்டைகள் இரண்டின் பெயர்களை எழுதுக.

.....
.....

4) இலங்கைக்கே உரித்தான முலையூட்டிகள் இரண்டு தருக.

.....
.....

5) அயடீன் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
.....

6) இயற்கையான அனர்த்தங்கள் மூன்றினை எழுதுக.
.....
.....
.....

7) ஒலிம்பிக் விளையாட்டுக்கள் இரண்டினை எழுதுக.
.....
.....

8) பின்வரும் சேவை நிலையங்களில் சேவையை வழங்கும் தலைமை அதிகாரிகள் யாரென எழுதுக.

i. பாடசாலை :- .....
ii. பிரதேசசெயலகம் :- .....
iii. பொலிஸ் நிலையம் :- .....

9) ஒவ்வொரு சமயங்களுக்குமுரிய வழிபாட்டுத் தலங்களின் பெயர்களை எழுதுக.

பௌத்தம் ..... இஸ்லாம் .....

இந்துசமயம் ..... கிறிஸ்தவம் .....

www.lkedu.lk

10)தண்டு வைரமானதும், தண்டில் கிளைகள், பட்டைகள், பொந்துகள் காணப்படக் கூடியதுமான தாவரங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.

.....

.....

(2x10புள்ளிகள்)

09.பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தினைஎழுதுக.

i. National flag .....

ii. flowers .....

iii. snail .....

iv. hoppers.....

v. May I come in ? ..... (1x5புள்ளிகள்)

10. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தினை எழுதுக.

i. අඹුව .....

ii. සීයා .....

iii. පුතාතා .....

iv. උඩට්ට.....

v. සෝදන්න..... (1x5புள்ளிகள்)

www.lkedu.lk